# 14 மூட ஆமை

குளம் ஒன்றில் ஆமையும்
கொக்கு இரண்டும் வாழ்ந்தன!
குளத்தில் தண்ணீர் வற்றவே
கூடி மூன்றும் வருந்தின.

அண்டை ஊரில் உள்ளதோர்
அழகுக் குளத்தை நாடியே
இரண்டு கொக்கும் போகவே
எண்ணி முடிவு செய்தன.

அதனைக் கண்ட ஆமையும்
அழுதே. ‘‘ அண்ணன் மார்களே
இதனை விட்டுப் போகவே
எனக்கும் உதவி செய்யுங்கள்;

நன்மைக் கால முற்றிலும்
நட்புச் செய்து வாழ்ந்தவர்
துன்பம் கண்ட போதிலே
துறந்து போதல் இல்லையே!’’

என்று கூறி வேண்டவே
இரண்டு கொக்கும் அதனிடம்
நன்று, நன்று; தம்பியே!
நாங்கள் பறந்து செல்லுவோம்!



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

நீயும் வருவ தெப்படி?
நெடுந்தொ லைவும் ஆனதே!
காயும் வெய்யில் கருக்குமே!
கால்கள் சோர்ந்து போகுமே!"


என்று கூறிக் கொக்குகள்
இரண்டும் வருந்தி நாளெல்லாம்
ஒன்று கூடி ஆய்ந்தன!
உளவும் ஒன்று கண்டன!

"ஆமைத் தம்பி உன்னையே
அழைத்துப் போவதென்னிலோ,
ஊமை போல் இக் குச்சியை
உன்றன் வாயால் பற்றிக்கொள்

குச்சி முனைகள் இரண்டையும்
கௌவிப் பறந்து செல்லுவோம்
உச்சி வானில் செல்கையில்
உன்றன் வாயைத் திறப்பையேல்



தரையில் வந்து வீழுவாய்;
தவிடு பொடி ஆகுவாய்
மறந்திடாதே" என்றன.
'மறவேன்' என்ற(து) ஆமையே!



குச்சி ஒன்றைக் கொணர்ந்தன;
கௌவிக் கொண்ட(து) ஆமையும்!
உச்சி வானில் பறந்தன !
ஊரார் நின்று பார்த்தனர்!

சிறுவர் கைகள் கொட்டியே
சிரித்துக் கூச்சல் போட்டனர்.
துறு துறுத்த ஆமையும்
தூக்கிச் செல்லும் நண்பரைக்

"கீழே இரைச்சல் ஏன்" எனக்
கேட்க வாயைத் திறந்ததும்
வீழ்ந்து நொறுங்கிப் போனதே!
வீணில் உயிரைத் துறந்ததே

மூத்தோர் சொல்லைக் கேட்டிடா
மூட ஆமை இறந்ததே!
காத்துக் கொள்ளல் வேண்டுமே,
கடமை அடக்கம் இரண்டையே!

- பெருஞ்சித்திரனார் -





இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# சொல் அறிமுகம்

## වචන හඳුනාගනිමු

1. வற்றுதல் - හිඳීම
2. வருந்தி - දුක්වී
3. அண்டை - අසල
4. நாடி - සොයා
5. எண்ணி - සිතා
6. முற்றிலும் - සම්පූර්ණයෙන්
7. துறந்து - අතහැර
8. நெடுந்தொலைவு - ඉතා දුර
9. கருக்கும் - කලුවරයි
10. ஆய்ந்தன - සමීක්ෂණය කළා
11. உளவு - උපාය
12. ஊமை - ගොලු
13. முனை - පිළිබිඹුව
14. குச்சி - කෝටු කැලි
15. தவிடு பொடி - සුන්වී
16. கௌவி - ඩැහැගෙන/ කටෙන් අල්ලගෙන
17. துறுதுறுத்தல் - කඩිසරකම
18. இரைச்சல் - ශබ්දය
19. நொருங்கி - කුඩු වී
20. வீண் - අපතේ
21. கடமை - යුතුකම
22. அடக்கம் - තැන්පත්

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**
**පහත දී ඇති ප්‍රශ්නවලට උත්තර ලියමු.**

1. கொக்குகள் ஏன் அயல் ஊருக்குச் செல்ல நினைத்தன?
2. ஆமை கொக்குகளிடம் என்ன கூறியது?
3. ஆமை ஏன் கீழே விழுந்தது?
4. பறந்து செல்கையில் அடையும் சிரமங்கள் எவையென கொக்குகள் கூறின?
5. இந்தக் கதை மூலம் நீங்கள் பெறும் படிப்பினைகள் இரண்டினை எழுதுக.

### *செயற்பாடு - I*

**பின்வரும் ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக வும் பன்மை வாக்கியங்களை ஒருமை வாக்கியங்களாகவும் மாற்றி எழுதுவோம்.**
**පහත සඳහන් ඒක වචන වාක්‍ය බහු වචන වාක්‍ය ලෙසටත් බහුවචන වාක්‍ය ඒක වචන වාක්‍ය ලෙසටත් හරවා ලියමු**

1. எனக்கும் உதவி செய்யுங்கள்.
2. நாங்கள் பறந்து செல்லுவோம்.
3. நீயும் வருவதெப்படி?
4. உனது வாயால் பற்றிக் கொள்.
5. ஆமை கௌவிக் கொண்டது.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - II


**முதல் ஐந்து பாடற் பகுதிகளையும் வாசித்து, ஒலி வேறுபாடுடைய சொற்களை இனங்கண்டு பின்வரும் அட்டவணையில் எழுதுவோம்.**


| ல | ள | ழ | ற | ண |
|---|---|---|---|---|
| உ + ம் காலம் | குளம் | வாழ்ந்தன | வற்றவே | தண்ணீர் |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |


எழுதிய சொற்களைச் சரியாக உச்சரித்து வாசிப்போம்.

## செயற்பாடு - III

(அ) சொற்சக்கரங்களின் ஓரத்தில் இருக்கும் எழுத்துக்களோடு நடுவில் உள்ள எழுத்தைச் சேர்த்துச் சொற்களாக்கி எழுதி, உரத்து வாசித்துப் பயிற்சி பெறுங்கள்.



**(ஆ) முதலாம் சக்கரத்தில் உள்ள சொற்களை வைத்துப் பின்வரும் வாக்கியங்களை நிரப்புவோம்.**
**ඉහත පිටුව වන පළමුවෙනි චක්‍රයේ ඇති වචන යොදා පහත සඳහන් වාක්‍ය පුරවමු.**

1. தெரிந்தவர்களைக் கண்டால் நாய் ............................... ஆட்டும்.

2. .......................................... எறிந்து விளையாடக் கூடாது.

3. எப்போதும் நீ நிமிர்ந்து ..........................................

4. புலி ........................................ தின்னாது.

5. நீண்ட தூரம் நடந்ததால் .......................................... வலித்தது.

## செயற்பாடு - IV

**பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புவோம்.** **සුදුසු වචන යොදා හිස්තැන් පුරවමු.**

1. மலரில் பிறப்பது மணம்
   உள்ளத்தின் மறு பெயர் ................................

2. ஆடையில் படிவது கறை
   ஆற்றின் ஓரம் ..................................

3. ஆற்றில் வருவது வெள்ளம்
   கரும்பில் கிடைப்பது ................................

4. மாட்டுக்கு இருப்பது வால்
   வீரனின் கையில் இருப்பது ....................................
   ஊரோடு ஒத்து ......................................


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - V

குளத்தில் நீர் வற்றிய உடன் கொக்குகளுக்கும் ஆமைக்கு மிடையே நடந்த ஆரம்ப உரையாடல் இங்கு தரப்படுகிறது. தொடர்ந்து உரையாடலை எழுதுங்கள்.

**கொக்கு 1** : குளம் வற்றி விட்டது. நான் வேறு குளத்திற்குப் போகிறேன்.

**கொக்கு 2** : நானும் வருகின்றேன். இருவரும் சேர்ந்து செல்வோம்.

**ஆமை** : (அழுது கொண்டே) என்னைத் தனியே விட்டுச் செல்லாதீர்கள். என்னையும் அழைத்துச் செல்லுங்கள்.

**கொக்கு 1** : ..........................................................................

: ..........................................................................

: ..........................................................................

## செயற்பாடு - VI

- நீங்கள் எழுதிய உரையாடலை வகுப்பறையில் நிகழ்த்திக் காட்டுங்கள்.

## செயற்பாடு - VII

- இக்கதையுடன் தொடர்புடைய பழமொழிகளைத் தெரிவு செய்து எழுதுங்கள்.

உதாரணமாக :-

1. துள்ளிய மாடு பொதி சுமக்கும்.
2. ..................................................
3. ..................................................
4. ..................................................
5. ..................................................